THE HON. THIRU A. P. DHARMALINGAM : Sir, I move the following amendment :—

'In the enacting formula, *for* the words "Twenty-fifth year" *sustitute* the words "Twenty-sixth year".

The amendment was put and carried.

The Enacting Formula, as amended, was put and carried.

Clause 1.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 1 do stand part of the Bill"

THE HON. THIRU A. P. DHARMALINGAM : Sir, I move the following amendment :—

In Clause 1. *for* the figures "1974" *substitute* the figures "1975".

The amendment was put and carried.

Clause 1, as amended, was put and carried.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"1974-ம் ஆண்டு சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டப்படி, நிறைவேற்றப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(எ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு மின்சக்தி தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/75).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு மின் சக்தி தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

* 11—4—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளிடப் பட்டுள்ளது.

1975 ஏப்ரல் 18] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

ஒவ்வொரு உரிமதாரரும் யூனிட் ஒன்றுக்கு 18 பைசாவிற்கு மேற்பட்ட விலையில் விற்கும் மின் சக்திக்கு யூனிட் ஒன்றுக்கு 3 பைசா வீதம் கணக்கிடப்படும் தீர்வையை மாநில அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வருவாயை பெருக்கும் நோக்கத்துடன் உரிமதாரர்களுக்கு மொத்தமாக வழங்கப்படும் மின் சக்திக்கான மின் கட்டண வீதங்கள் 1972 நவம்பர் 5 ஆம் நாளிலிருந்து திருத்தியமைக்கப்பட்டு உள்ளன. அதன் விளைவாக தமிழ்நாடு மின் வாரியத்திடம் இருக்கும் சில உரிமதாரர்கள் மின் சக்தியை வாங்குவதற்காக இவ் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கூடுதல் தொகையை ஈடு செய்யும் பொருட்டு அவர்களது பகுதிகளில் மின்சாரத்தை பயன்படுத்தியும் பல்வேறு வகையினருக்கு அதாவது குறை அழுத்த மின் சக்தி, தெரு விளக்கு ஆகியவற்றிற்கான மின் கட்டண வீதங்களை உயர்த்தியுள்ளனர். உரிமதாரர்கள் விதிக்கக் கருதியுள்ள இந்த வீதங்கள் சில வகைப்பாடுகளில் தற்பொழுதுள்ள தீர்வை செலுத்தத்தக்க வரம்புகளைவிட அதிகமாக இருப்பதால் அவ் வீதங்கள் தீர்வை செலுத்தத்தக்க வீதங்கள் ஆகிவிட்டன. மின்சாரத் தீர்வை சட்டத்தின் விதித் துறைகள் இதுகாறும் பொருந்தாமல் இருக்கும் மின் வழங்குகள் இப்பொழுது இச்சட்டத்தின் வரம்புக்குள் வந்துவிட்டன. எனவே, தீர்வை செலுத்தத் தக்க வரம்பை 18 காசிலிருந்து 20 காசாக மேற்சொன்ன தேதியிலிருந்து உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

இத்திருத்தங்கள் மின் வாரியம் மின் கட்டண வீதங்களை திருத்த அமைத்துள்ள தேதியான 5—11—1972-ல் இருந்தே செயலுக்கு வந்து இருப்பதாகச் செய்யவும் கருதப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

" தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/75) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு 1975-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/75)

THE HON. THIRU O. P. RAMAN : Mr. Deputy Speaker Sir, I beg to move—

" That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill,* 1975 (L.A. Bill No. 18 of 1975) be taken into consideration "

Under item 3-A in the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959), " Batteries " are liable to a single point tax at the rate of 15 per cent, at the point of first sale in this State. A question arose in Tribunal Appeal No. 986 of 1971, before the Sales Tax Appellate Tribunal, Madras whether the term " Batteries " in the said item 3-A would include parts of batteries such as " battery plates ". The Tribunal in the aforesaid Appeal observed that battery plates did not come either under multipoint tax or under the said item 3-A but fell only under item 41 of the First Schedule to the said Act. It was decided that entry 3-A might be amended to include " parts of batteries " also. Accordingly, notification was issued under sub-section (1) of section 59 of the said Act amending entry 3-A in the First Schedule to the said Act.

* Published in the *Tamil Nadu Government Gazette, Extraordinary*, dated 16th April 1975.